## ஜூன் – 08 - வியாழன்

### புனித மரிய தெரேசா

**உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்! நீர் நற்பேறும் நலமும் பெறுவீர்! திபா. 128:2**

### முதல் வாசகம்: தோபித்து 6:10 – 11, 7:1, 9-16,8:4-9

அந்நாட்களில் தோபித்தும் அசரியாவும் மேதியா நாட்டினுள் சென்று எக்பத்தானாவை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். இரபேல் இளைஞரை நோக்கி, "சகோதரர் தோபியா" என்று அழைத்தார். அதற்கு அவர், "என்ன?" என்றார். அவரிடம் அவர், "இன்று இரவு நாம் இரகுவேலின் வீட்டில் தங்க வேண்டும். அவர் உமக்கு உறவினர் அவருக்குச் சாரா என்னும் ஒரு மகள் இருக்கிறாள். அவர்கள் எக்பத்தானாவை அடைந்தபொழுது தோபியா அசரியாவிடம், "சகோதரர் அசரியா, உடனே என்னை நம் உறவினர் இரகுவேலின் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்" என்றார். எனவே இரபேல் அவரை இரகுவேலின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். இரகுவேல் தம் வீட்டு முற்றத்துக் கதவு அருகே அமர்ந்திருக்க அவர்கள் கண்டு முதலில் அவரை வாழ்த்தினார்கள். அதற்கு அவர், "இளைஞர்களே, வணக்கம். உங்களுக்கு நலம் பெருகட்டும்" என்று அவர்களை வாழ்த்தினார். பின்னர், அவர்களை அவர் வீட்டிற்குள் அழைத்துச் சென்று, இரகுவேல் தம் ஆடுகளுள் ஒன்றை அடித்து அவர்களைச் சிறப்பாக உபசரித்தார். அவர்கள் குளித்தபின் கை அலம்பிவிட்டு உணவு அருந்த அமர்ந்தார்கள். தோபியா அசரியாவிடம், "சகோதரரே, என் உறவினளான சாராவை எனக்கு மணம் செய்துகொடுக்குமாறு இரகுவேலிடம் கேளும்" என்றார். இச்சொற்கள் இரகுவேலின் செவியில் விழுந்தன. அவர் இளைஞரிடம், "நீ இன்று இரவு உண்டு பருகி மகிழ்வுடன் இரு. தம்பி, என் மகள் சாராவை மணந்து கொள்ள உன்னைத்தவிர உரிமை உள்ள மனிதர் வேறு எவரும் இல்லை. உன்னைத்தவிர வேறு எவருக்கும் அவளைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் இல்லை ஏனெனில் நீ என் நெருங்கிய உறவினன். ஆயினும், தம்பி, உன்னிடம் ஓர் உண்மையைக் கூற விரும்புகிறேன். அவளை நம் உறவினர்களுள் எழுவருக்கு மணமுடித்துக் கொடுத்தேன். அவளைக் கூடுவதற்கு நெருங்கிய அன்றிரவே அவர்கள் அனைவரும் இறந்தார்கள். இப்பொழுது, தம்பி, உண்டு பருகு. ஆண்டவர் உங்கள் இருவருக்கும் நல்லது செய்வார்" என்றார். அதற்குத் தோபியா, "நீங்கள் இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரும்வரை நான் உண்ணமாட்டேன். பருக மாட்டேன்" என்றார். இரகுவேல், "சரி, செய்கிறேன் மோசேயின் நூலில் விதித்துள்ளபடியே அவளை உனக்கு மணமுடித்துக் கொடுப்பேன். உனக்கு அவளைக் கொடுக்கும்படி விண்ணகத்தில் உறுதி செய்யப்பட்டு விட்டது. ஆகவே உன் உறவினளை ஏற்றுக்கொள். இனி நீ அவளுக்கு உரியவன் அவள் உனக்குரியவள் இன்று முதல் என்றுமே அவள் உன்னுடையவள். தம்பி, விண்ணக ஆண்டவர் இன்று இரவு உங்களைக் காப்பாராக் உங்கள் மீது இரக்கமும் அமைதியும் பொழிவாராக" என்றார். இரகுவேல் தம் மகள் சாராவை அழைக்க, அவள் வந்தாள். அவளது கையைப் பிடித்துத் தோபியாவிடம் கொடுத்தார். "மோசேயின் நூலில் விதித்துள்ள சட்டங்கள், முறைமைகளின்படி இவள் உனக்கு மனைவியாகிறாள். இவளை ஏற்றுக் கொண்டு உன் தந்தையின் வீட்டுக்கு இனிதே அழைத்துச் செல். விண்ணகக் கடவுள் உங்களுக்கு அமைதி அருள்வாராக" என்றார். பின்பு, அவர் சாராவின் தாயை அழைத்து ஓர் ஏட்டைக் கொண்டுவரச் சொன்னார். மோசேயின் சட்டம் விதித்துள்ளபடி சாராவைத் தோபியாவின் மனைவியாக்கும் திருமண ஒப்பந்தத்தை அதில் எழுதிக் கொடுத்தார். அதன் பின் அவர்கள் உண்டு பருகத் தொடங்கினார்கள். இரகுவேல் தம் மனைவி எதினாவை அழைத்து அவரிடம், "அன்பே, மற்றோர் அறையை ஏற்பாடு வெய்து அவளை அங்கு அழைத்துச் செல்" என்றார். இரகுவேல் தமக்குக் கூறியபடி அவர் சென்று அறையில் படுக்கையை ஏற்பாடு செய்தார் தம் மகளை அங்கு அழைத்துச் சென்று, அவளுக்காக அழுதார். பிறகு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவளிடம், "அஞ்சாதே, மகளே, விண்ணக ஆண்டவர் உன் துயரத்தை மகிழ்ச்சியாக மாற்றுவார். துணிவுகொள், மகளே!" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார் சாராவின் பெற்றோர் வெளியில் சென்று அறையின் கதவை மூடினர். தோபியா படுக்கையிலிருந்து எழுந்து சாராவிடம், "அன்பே, எழுந்திரு. நம் ஆண்டவர் நம்மீது இரங்கிக் காத்தருளுமாறு பணிந்து மன்றாடுவோம்" என்றார். சாரா எழுந்து நின்றாள். அவர்கள் மன்றாடத் தொடங்கி, தங்களைக் காத்தருளுமாறு வேண்டினார்கள். தோபியா பின்வருமாறு வேண்டினார் "எங்கள் மூதாதையரின் இறைவா, போற்றி உமது பெயர் என்றென்றும் எல்லாத் தலைமுறைகளுக்கும் போற்றி! வானங்களும் உம் படைப்பு அனைத்தும் எக்காலமும் உம்மைப் போற்றுக! நீர் ஆதாமைப் படைத்தீர் அவருடைய மனைவி ஏவாளை அவருக்குத் துணையாகவும் ஆதரவாகவும் உண்டாக்கினீர். அவர்கள் இருவரிடமிருந்தும் மனித இனம் தோன்றியது. "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று அவனுக்குத் தகுந்ததொரு துணையை உருவாக்குவோம்" என்று உரைத்தீர். இப்பொழுது என் உறவினள் இவளை நான் மனைவியாக ஏற்றுக்கொள்வது இச்சையின் பொருட்டன்று, நேர்மையான நோக்கத்தோடுதான். என்மீதும் இவள்மீதும் இரக்கம் காட்டும் நாங்கள் இருவரும் முதுமை அடையும்வரை இணை பிரியாது வாழச் செய்யும்." இருவரும் "ஆமென், ஆமென்" என்று கூறினர். அன்று இரவு உறங்கினர்.

**பதில்பாடல்:** ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்

### நற்செய்தி : மாற்கு 12 : 28 – 34

அக்காலத்தில் அவர்கள் வாதாடிக்கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த மறைநூல் அறிஞருள் ஒருவர், இயேசு அவர்களுக்கு நன்கு பதில் கூறிக்கொண்டிருந்ததைக் கண்டு அவரை அணுகி வந்து, "அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "இஸ்ரயேலே கேள். நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழுமனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக" என்பது முதன்மையான கட்டளை. "உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக" என்பது இரண்டாவது கட்டளை. இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை" என்றார். அதற்கு மறைநூல் அறிஞர் அவரிடம், "நன்று போதகரே, "கடவுள் ஒருவரே அவரைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை" என்று நீர் கூறியது உண்மையே. அவரிடம் முழு இதயத்தோடும் முழு அறிவோடும் முழு ஆற்றலோடும் அன்பு செலுத்துவதும், தன்னிடம் அன்புகொள்வது போல் அடுத்திருப் பவரிடம் அன்பு செலுத்தவதும் எரிபலிகளையும் வேறுபலிகளை யும்விட மேலானது" என்று கூறினார். அவர் அறிவுத்திறனோடு பதிலளித்ததைக் கண்ட இயேசு அவரிடம், "நீர் இறையாட்சியினின்று தொலையில் இல்லை" என்றார். அதன்பின் எவரும் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

**தியானம்:** இன்றைய உலகில் பலவிதமான அறிவியல் முன்னேற்றங்கள் இருக்கின்ற பொழுது பாவங்களும் மனிதனை தன் வயப்படுத்துகின்றது. இந்த உலகில் மனிதன் தன்னை பாதுகாத்துக்கொள்வதற்கும், ஒரு பயனுள்ள பாத்திரமாய் மாறுவதற்கும் உதவியாய் இருப்பது ஆண்டவர் மீது வைத்திருக்கும் அன்பு. (தி:பா 91: 14) என்மீது அன்பு கூறுபவரை நான் விடுவிப்பேன் இன்று மனிதன் பல நிலைகளில் விழுந்து எழ முடியாமல் இருப்பதற்கு முதல் காரணம் அவன் ஆண்டவரை அன்பு செய்யாமல் வாழ்கிறான். எப்பொழுதெல்லாம் ஆண்டவரை அன்பு செய்வோமோ, முழுமையாக அன்பு செய்வோமோ, முதன்மையாக முற்றிலுமாக அன்பு செய்வோமோ அப்பொழுதெல்லாம் எல்லாவிதமான கட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்படுகின்றோம். நாம் விடுதலை பெறுவதற்கும் எல்லா விதமான ஆசீவாதங்களைப் பெறுவதற்கும் ஒரு சிறந்த வழி இயேசுவை அன்பு செய்வதாகும். ஒவ்வொருநாளும் காலை எழுந்தவுடன் இரவு உறங்குவதற்கு முன்பாக மீண்டும் மீண்டுமாக இயேசுவே உம்மை அன்பு செய்கின்றேன் என்று சொல்லிப்பாருங்கள் உங்களில் பெரிய புதிய ஆற்றல் இருப்பதை காணக்கூடியதாக இருக்கும். இயேசுவை நேசிக்கின்ற மனிதன் எல்லா மனிதரையும் நேசிக்க முடியும்.